**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 487/2024**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடேஷ்குமார் | Caste | : |
| Father Name/ Husband Name | : பவுன்ராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(22.07.2025)**
**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 தனுஷ் என்பவரை நான் இதற்கு முன்பு கட்ராம்பட்டியில் குடியிருக்கும் போது தெரியும். கடந்த 08.08.24 அன்று காலை 8.30 மணியளவில் தனுஷின் அப்பா ரங்கசாமி எனக்கு போன் செய்து தனுஷ் பேசன் புரோ இருசக்கர வாகனத்தை 942 என்ற இருசக்கர வாகனத்தை திருமங்கலம் பழைய ஆர்.டி.ஓ அலுவலகம் அருகே ஆலம்பட்டி ரோட்டில் வரும் போது பிடுங்கி கொண்டு சென்றதாக கூறினார். நான் உடனே சம்பவயிடத்திற்கு நானும் ரங்கநாதன், ரங்கசாமி ஆகியோர்கள் மேற்படி இருசக்கர வாகனத்தை தேடிபார்த்தோம். வாகனம் கிடைக்கவில்லை. எனவே காவல் நிலையம் சென்று தனுசும் அவரது அப்பாவும் புகார் கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி**

மேற்சொன்ன விபவரத்தை தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 487/2024**

**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சத்யமூர்த்தி** | Caste | : |
| Father Name/ Husband Name | : **சந்திரசேகர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(22.07.2025)**

**முதல் விசாரணை**

நான் கட்ராம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் திருமங்கலத்தில் ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 08.08.2024 அன்று ஆலம்பட்டி ரோட்டில் உள்ள ஆர்.டி.ஓ அலுவலகம் அருகே மாலை 3.30 முதல் 4.00 மணியளவில் வேலை முடித்து நானும் என்னுடன் பணி செய்யும் அருள்ஆதிக்கண்ணனும் சென்ற போது போலிசார் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். இருசக்கரவாகனம் பிடுங்கி கொண்டு சென்ற சம்பமந்தமாக சம்பவயிடத்தில் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து போட்டோம். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் திருமங்கலத்தில் ஓட்டல் வைத்திருக்கிறேன். எனக்கு சொந்த ஊர் கட்ராம்பட்டியாகும். நாங்கள் போவதற்கு முன்பு போலிசார் அங்கு இருந்தார்கள். சம்பவம் நடந்ததாக போலிசார் சொன்னது டெடி எக்ஸ்போர்ட் வாயில் முன்பாக தான். அந்த வாசலில் செக்யூரிட்டி எப்போதும் இருப்பார்கள்.

நாங்கள் போகும் போது நிறைய வாகனங்கள் போய் வந்து கொண்டிருந்தன. என்னை நிறுத்தியதால் எந்த ஊர் என்று கேட்டார்கள். கட்ராம்பட்டி என நான் சொன்னேன். சம்பவம் பற்றியும் அதைபற்றி விசாரிப்பதாகவும் எழுதியிருந்தது. நான் கையெழுத்து போட்டேன்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 487/2024**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : அருள்ஆதிக்கண்ணன் | Caste | : |
| Father Name/ Husband Name | : கொண்டைசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(22.07.2025)**

**முதல் விசாரணை**

நான் கட்ராம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் திருமங்கலத்தில் ஓட்டலில் பணி செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 08.08.2024 அன்று ஆலம்பட்டி ரோட்டில் உள்ள ஆர்.டி.ஓ அலுவலகம் அருகே மாலை 4.00 மணியளவில் வேலை முடித்து நானும் எனது ஓட்டல் உரிமையாளர் சத்யமூர்த்தியும் சென்ற போது போலிசார் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். இருசக்கரவாகனம் பிடுங்கி கொண்டு சென்ற சம்பமந்தமாக சம்பவயிடத்தில் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து போட்டோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் திருமங்கலத்தில் ஓட்டலில் பணிபுரிந்துவருகிறேன். எனக்கு சொந்த ஊர் கட்ராம்பட்டியாகும். நாங்கள் போவதற்கு முன்பு போலிசார் அங்கு இருந்தார்கள். சம்பவம் நடந்ததாக போலிசார் சொன்னது டெடி எக்ஸ்போர்ட் வாயில் முன்பாக தான். அந்த வாசலில் செக்யூரிட்டி எப்போதும் இருப்பார்கள்.

நாங்கள் போகும் போது நிறைய வாகனங்கள் போய் வந்து கொண்டிருந்தன. என்னை நிறுத்தியதால் எந்த ஊர் என்று கேட்டார்கள். கட்ராம்பட்டி என நான் சொன்னேன். சம்பவம் பற்றியும் அதைபற்றி விசாரிப்பதாகவும் எழுதியிருந்தது. நான் கையெழுத்து போட்டேன்.